சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - வன்கொடுமை - 'சமத்துவம் காண்போம்' என்கிற தலைப்பில் காவல் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் பயிற்சி அளிப்பதற்கு ரூ. 40 இலட்சம் ஒப்பளிப்பு செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடு.தடு (2)) துறை**

**அரசாணை (நிலை) எண்: 36** **நாள் :19.05.2022**
**சுபகிருது வைகாசி 5-ஆம் நாள்**
**திருவள்ளுர் ஆண்டு 2053**

**படிக்கப்பட்டது:**

1. த.நா.ச.பே.எண்.27, நாள்.08.09.2021.
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதம் ந.க. எண்.ஏ4/26441/2021. நாள் 24.09.2021.
3. அரசாணை (நிலை) எண்.103, ஆதி (ம) பந (கொடுதடு.(2)) துறை, நாள்.07.12.2021.
4. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதம் ந.க. எண்.ஏ4/26441/2021. நாள் 04.12.2021.

---

**ஆணை:-**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்ற பேரவையின் விதி 110-இன் கீழ் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

> "வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வுப் பயிற்சிகள் 'சமத்துவம் காண்போம்' என்கிற தலைப்பில் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு நடத்தப்படும்".

(த.பி-பா.)

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் காவல் துறை, வருவாய் துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலகத்தை சேர்ந்த சுமார் 983 அலுவலர்களுக்கு இரண்டு நாட்கள் உண்டி உறைவிட வசதியுடன் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் கட்டணவிகிதத்தில் பயிற்சி நடத்துவதற்கு மொத்தம் ரூ.40.00 இலட்சத்தில் (983 நபர்களுக்கு 2 நாள் பயிற்சி கட்டணமாக ஒரு நாளைக்கு ரூ.2000/- வீதம் மொத்தம் ரூ.39,32,000/- அதாவது மொத்தம் (Rounded to) ரூ.40,00,000/-) பயிற்சியினை நடத்த நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேற்காணும் ஆணையினை தொடர்ந்து ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்கள் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் காவல் துறை, வருவாய் துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலகத்தை சேர்ந்த சுமார் 983 அலுவலர்களுக்கு இரண்டு நாட்கள் உண்டி உறைவிட வசதியுடன் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் கட்டணவிகிதத்தில் பயிற்சி நடத்துவதற்கு மொத்தம் ரூ.40.00 இலட்சம் (983 நபர்களுக்கு 2 நாள் பயிற்சி கட்டணமாக ஒரு நாளைக்கு ரூ.2000/- வீதம் மொத்தம் ரூ.39,32,000/- அதாவது மொத்தம் (Rounded to) ரூ.40,00,000/-) நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடுமாறு" அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல ஆணையரின் முன்மொழிவு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வுப் பயிற்சிகள் 'சமத்துவம் காண்போம்' என்கிற தலைப்பில் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் பயிற்சி அளிப்பதற்கு ரூ. 40 இலட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2235 சமூகப் பாதுகாப்பு நலனும் 01- மறுவாழ்வு – 200 ஏனைய துயர்தணிப்பு நடவடிக்கைகள், மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UA, கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கு நிதி உதவி – 372 பயிற்சி – 01 – பயிற்சி.

(IFHRMS த.தொ.கு. 2235 01 200 UA 37201)

6. மேலே, பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ. 40,00,000/- 2022-23-ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2022-23 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட இச்செலவினத்தை 2022-2023ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (ஆதி(ம)பந)/வ.செ.பொ.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7.இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.22528/நிதித் (ஆதி(ம)பந)துறை/2022, நாள் 16.05.2022 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 0182 (நூற்று எண்பத்து இரண்டு)-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

காவல் துறையின் தலைமை இயக்குநர், சென்னை – 600 004.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
கூடுதல் காவல் துறை இயக்குநர்,
சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு, சென்னை-600 004.
இயக்குநர், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி,
மகிழம்பூ, எண் 163/1, P.S. குமாரசாமி ராஜா சாலை,
(கிரின்வேஸ் சாலை), சென்னை -600 028.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 001.
முதன்மைக் கணக்காயர் (G & SSA), சென்னை - 600 018.
மாநில கணக்காயர், சென்னை - 600 0018/35.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை- 600 009.

**<u>நகல்</u>**

முதலமைச்சரின் செயலாளர், சென்னை-600 009.
அமைச்சர் (ஆதிந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை – 600 009.
இயக்குநர், தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையம், சென்னை – 600 006.
இயக்குநர், பழங்குடியினர் நல ஆணையம், சென்னை-600 006
நிதித் (ஆதி(ம)பந)வ.செ.பொ.I/வ.செ.பொ.II/வ.வ.I) துறை,
சென்னை – 600 009.
சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

19/5/2022
**தேர்வு நிலை பிரிவு அலுவலர்**

19/5/2022